# Chapter

# உள்ளாட்சி அமைப்பு – ஊரகமும் நகர்ப்புறமும்

---

### I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்

**Question 1.**
பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ….. அமைக்கப்படுகிறது.
அ) ஊராட்சி ஒன்றியம்
ஆ) மாவட்ட ஊராட்சி
இ) வட்டம் ஈ) வருவாய் கிராமம்

**விடை:**
அ) ஊராட்சி ஒன்றியம்

**Question 2.**
தேசிய ஊராட்சி தினம் ……. ஆகும்.
அ) ஜனவரி 24
ஆ) ஜீலை 24
இ) நவம்பர் 24
ஈ) ஏப்ரல் 24

**விடை:**
ஈ) ஏப்ரல் 24

**Question 3.**
இந்தியாவின் பழமையான உள்ளாட்சி அமைப்பாக அமைக்கப்பட்ட நகரம் …
அ) டெல்லி
ஆ) சென்னை
இ) கொல்கத்தா
ஈ) மும்பாய்

**விடை:**
ஆ) சென்னை

**Question 4.**
அதிகப்படியான ஊராட்சி ஒன்றியங்கள் உள்ள மாவட்டம் ..........
அ) வேலூர்
ஆ) திருவள்ளூர்
இ) விழுப்புரம்
ஈ) காஞ்சிபுரம்

**விடை:**
இ) விழுப்புரம்

**Question 5.**
மாநகராட்சியின் தலைவர் ...... என அழைக்கப்படுகிறார்
அ) மேயர்
ஆ) கமிஷ்னர்
இ) பெருந்தலைவர்
ஈ) தலைவர்

**விடை:**
அ) மேயர்

## II. நிரப்புக

**Question 1.**
இந்தியாவிலேயே பேரூராட்சி என்ற அமைப்பை அறிமுகப்படுத்திய மாநிலம் ........ ஆகும்.

**விடை:**
தமிழ்நாடு

**Question 2.**
பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு .............

**விடை:**
1992

**Question 3.**
உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் ............ ஆண்டுகள்.

**விடை:**
5

**Question 4.**
தமிழ்நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட நகராட்சி ……. ஆகும்.

**விடை:**
வாலாஜாபேட்டை நகராட்சி

### III. பொருத்துக

| | | |
|---|---|---|
| கிராம சபை | - | செயல் அலுவலர் |
| ஊராட்சி ஒன்றியம் | - | மாநிலத் தேர்தல் ஆணையம் |
| பேரூராட்சி | - | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| உள்ளாட்சித் தேர்தல் | - | நிரந்தர அமைப்பு |

**விடை:**
1. நிரந்தர அமைப்பு
2. வட்டார வளர்ச்சி அலுவலர்
3. செயல் அலுவலர்
4. மாநிலத் தேர்தல் ஆணையம்

### IV. விடையளிக்கவும்.

**Question 1.**
உன் மாவட்டத்தில் மாநகராட்சி இருப்பின், அதன் பெயரைக் எழுதவும்?

**விடை:**
ஆம். திருநெல்வேலி மாநகராட்சி

**Question 2.**
உள்ளாட்சி அமைப்புகளின் அவசியம் யாது?

**விடை:**
உள்ளாட்சி அமைப்புகள் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் உள்ளூர் அமைப்புகளின் திறமையான

செயல்பாட்டிற்கும் மக்களை நேரடியாக ஈடுபடுவதற்கு அவசியமாகும்.

**Question 3.**
ஊரக உள்ளாட்சி அமைப்புகள் யாவை?

**விடை:**
ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி

**Question 4.**
நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை?

**விடை:**
மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி.

**Question 5.**
கிராம ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் யாவர்?

**விடை:**
கிராம ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்

- ஊராட்சி மன்றத் தலைவர்.
- பகுதி உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்)
- மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்.

**Question 6.**
மாநகராட்சியின் பணிகள் சிலவற்றைப் பட்டியலிடுக.

**விடை:**

- குடிநீர் வசதி
- தெரு விளக்கு அமைத்தல்
- தூய்மைப் பணி
- மருத்துவச் சேவை
- மாநகராட்சிப் பள்ளிகள்
- பிறப்பு, இறப்பு பதிவு இன்னும் பிற

**Question 7.**
கிராம ஊராட்சியின் வருவாய்களைப் பட்டியலிடுக.

**விடை:**
வீட்டு வரி, தொழில் வரி, கடைகள் மீதான வரி, குடிநீர் இணைப்புக்கான கட்டணம், நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு, மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு இன்னும் பிற

**Question 8.**
கிராம சபைக் கூட்டம் நடைபெறும் நாள்கள் யாவை? அந்நாள்களின் சிறப்புகள் யாவை?

**விடை:**

- கிராம சபைக் கூட்டம் ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2, ஆகிய நாட்களில் நடைபெறும்.
- தேசிய விழா தினமாக இந்த நாட்கள் கொண்டாடப்படுகின்றன.

**Question 9.**
பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?

**விடை:**
கிராம சபை அமைத்தல், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு, இட ஒதுக்கீடு, தேர்தல், பதவிக்காலம், நிதி க்குழு, கணக்கு மற்றும் தணிக்கை, இன்னும் பிற

**Question 10.**
கிராம சபையின் முக்கியத்துவம் யாது?

**விடை:**

- கிராமத்து பஞ்சாயத்துகளின் திறமையான செயல்பாட்டுக்கு கிராமப்புற சபா மிகவும் அவசியமானதாகும்.
- இது சமூக நலனுக்கான திட்டங்களை தீட்டுதல் மற்றும் செயல்படுத்துவதில் பொது மக்கள் பங்கேற்பைப் மேம்படுத்துகிறது.

## V. உயர் சிந்தனை வினா

**Question 1.**
கிராம மற்றும் நகர மேம்பாட்டிற்கு உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன. எவ்வாறு?

**விடை:**

- இந்திய நாடு ஒரு அகன்ற நாடாகும். ஒரே ஒரு அரசாங்கத்தால், நாட்டின் முழு நிர்வாகத்தையும், கவனிக்க இயலாது.
- நமது இந்திய அரசமைப்புச்சட்டம் மூன்று நிலைகளில் நிர்வாகத்தை பிரித்துள்ளது. மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்.
- உள்ளாட்சி அமைப்புகள் கிராமம் மற்றும் நகரங்களின் உள்ளூர் நிர்வாகத்தை கவனித்துக்
கொள்ளும்.
- உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான பணிகள் :
  - தெருக்களைத் தூய்மைப்படுத்துதல்,
  - சாலைகள் மற்றும் பள்ளிகள் கட்டுதல்,
  - குடிநீர் மற்றும் மின்வசதி அமைத்தல்

## VI. செயல்பாடுகள்

**Question 1.**
உள்ளாட்சி பிரதிநிதியை நேர்காணல் செய்வதற்காக வினா நிரல் தயாரிக்கவும்.

**விடை:**

- நம் பகுதியில் சிறந்த வடிகால் அமைப்பதற்கு தங்களின் திட்டம் என்ன?
- மகாராஜ நகர், மற்றும் தியாகராஜ நகரை இணைக்கும் பாலக் கட்டுமானம் எப்போது நிறைவடையும்?
- நம் பகுதியில் தெரு விளக்கு அமைக்கும் பணி எத்தனை மாதங்களில் முடிவடையும்?

**Question 2.**
பள்ளியின் மேம்பாட்டிற்கு உள்ளாட்சி பிரதிநிதிகளின் பங்களிப்பு இருப்பின் கலந்துரையாடுக.

**விடை:**

- உள்ளாட்சி பிரதிநிதிகள் எங்கள் பள்ளியின் மேம்பாட்டிற்காக அபரிமிதமான உதவிகள் செய்துள்ளனர்.
- பள்ளியின் வளர்ச்சிக்காக அவர்கள் நகரின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள், மற்றும் பள்ளியின் பழைய மாணவர்களை நாடி உதவி பெற்றனர்.
- அவர்கள் திரட்டிய நிதியில் இருந்து பள்ளிக்கு தேவையான கணினி, ஆய்வக உபகரணங்கள் மற்றும் நூலகத்திற்கு தேவையான புத்தகங்களை வழங்கினர்.

**Question 3.**
நான் உள்ளாட்சி பிரதிநிதியானால்…?

**விடை:**

- சிறந்த வடிகால் திட்டம் அமைக்கப் பாடுபடுவேன்.
- டெங்கு போன்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கும் வழிகளை ஆராய்ந்து செயல் படுத்துவேன்.
- நன்கு திட்டமிட்ட சாலை வசதிகளையும், நன்கு ஒளியூட்டும் விளக்குகளையும் ஏற்பாடு செய்து மக்கள் நலமுடன் வாழ வழி வகுப்பேன்.

**Question 4.**
உன் மாவட்டத்தில் உள்ள பல வகையான உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கையைக் கேட்டறிந்து பதிவிடவும்.

**விடை:**
மாவட்டத்தின் பெயர் : திருநெல்வேலி
கிராம ஊராட்சி : இராஜகோபாலபுரம்
ஊராட்சி ஒன்றியம் : முத்தூர்
மாவட்ட ஊராட்சி பேரூராட்சி : குலவணிகர்புரம்
நகராட்சி மாநகராட்சி : திருநெல்வேலி மாநகராட்சி

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக

**Question 1.**
தமிழ்நாட்டில் ………. மாநகராட்சிகள் இருக்கின்றன.

**விடை:**
12

**Question 2.**
சென்னை மாநகராட்சி ……….. உருவாக்கப்பட்டது.

**விடை:**
1688

**Question 3.**
நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் ……….. மாவட்டம்

**விடை:**
காஞ்சிபுரம்

**Question 4.**
நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடைப்பட்ட ஊர் …………

**விடை:**
பேரூராட்சி

**Question 5.**
கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு ………. ஊராட்சி ஆகும்.

**விடை:**
கிராமம்

**Question 6.**
……. மற்றும் …….. மாவட்டங்களில் மிக குறைந்த அளவு ஊராட்சி ஒன்றியங்களே உள்ளன.

**விடை:**
நிலகீரி மற்றும் பெரம்பலூர்

**Question 7.**
தொகுதிகள் …….. எனவும் அழைக்கப்படுகின்றன.

**விடை:**
பகுதிகள்

## II. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

**Question 1.**
இந்தியாவின் அரசியல் அமைப்பின் அடித்தளமாக பஞ்சாயத்து ராஜை பரிந்துரைத்தவர் ....
அ) ஜவஹர்லால் நேரு
ஆ) மகாத்மா காந்தி
இ) இராஜேந்திர பிரசாத்

**விடை:**
ஆ) மகாத்மா காந்தி

**Question 2.**
அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் .... இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
அ) 30%
ஆ) 25%
இ) 33%

**விடை:**
இ) 33%

**Question 3.**
2011ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் ... இடங்களில் வெற்றி பெற்றனர்.
அ) 38%
ஆ) 28%
இ) 48%

**விடை:**
அ) 38%

**Question 4.**
தமிழக அரசு 2016 ஆம் ஆண்டு பெண்களுக்கு உள்ளாட்சியில் ........... இட ஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் செய்துள்ளது.

அ) 40%
ஆ) 50%
இ) 60%

**விடை:**
ஆ) 50%

**Question 5.**
தமிழகத்தின் தேர்தல் ஆணையம் … மாவட்டத்தில் உள்ளது.
அ) சென்னை
ஆ) கோயம்புத்தூர்
இ) திருச்சி

**விடை:**
அ) சென்னை

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

**Question 1.**
மாநகராட்சியின் அதிகாரிகள் குறிப்பு வரைக.

**விடை:**

- மாநகராட்சிக்கு இந்திய ஆட்சிப்பணி (இ.ஆ.ப) அதிகாரி ஒருவர் ஆணையராக இருப்பார்.
- நகராட்சிகளுக்கு அரசு அதிகாரிகள் நகராட்சி ஆணையர்களாக நியமிக்கப்படுவார்கள்.
- பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் செயல் அலுவலர் ஆவார்.

**Question 2.**
ஊராட்சி ஒன்றியம் பற்றி விளக்குக.

**விடை:**

- பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) ஒருவர் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.

- கவுன்சிலர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர்.
- துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் இதன் நிர்வாக அலுவலர் ஆவார்.
- ஊராட்சி ஒன்றிய அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## IV. விரிவான விடையளி.

**Question 1.**
மாவட்ட ஊராட்சி குறிப்பு வரைக.

**விடை:**

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது.
- 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது.
- பகுதி உறுப்பினர்களாக கிராம ஊராட்சி மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.
- மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் செய்கின்றனர்.

## மன வரைபடம்

